தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-10-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அகிம்சையே நாட்டு முன்னேற்றத்திற்கு அடித்தளம் - சர்வதேச வன்முறை ஒழிப்பு தினத்தில், வேளாண் கல்லூரி முதன்மையர் தகவல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் மாணவர் மன்றம் இணைந்து, நாட்டு நலப்பணித்திட்ட அறிமுக விழா மற்றும் சர்வதேச வன்முறை ஒழிப்பு தினம் நிகழ்த்தப்பட்டது. வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் ச.மகிமைராஜா தலைமை தாங்கி பேசுகையில் அகிம்சையே நாட்டு முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்குகிறது எக்காலத்திற்கும் ஏற்றது. மாணவ சமுதாயம் காந்தியடிகளின் வழியைப் பின்பற்றி நாட்டு முன்னேற்றத்தில் பங்கு பெறவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இளைஞர்கள் மது, போதை போன்ற தீயசக்திகளிடமிருந்து இரண்டாவது விடுதலை பெறவேண்டும் என்றார். ஐகபேசி உபயோகம் மறுக்கப்பட்டால் உலகில் உள்ள 40 சதவிகித மக்கள் ஒரே நாளில் மனநிலை குன்றியவர்களாக ஆகிவிடுவர் என்ற அமெரிக்க ஆய்வாளரின் ஆய்வுக் கருத்தினை சுட்டிக்காட்டி இளைஞர்கள் கைபேசி மற்றும் இணையதளம் போன்ற தொழில்நுட்பங்களை நல்வழியில் பயன்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தினார். திரு. இரா. மகேஷ் பிரபு, காருண்யா பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் தன் சிறப்புரையில் நாட்டுநலப் பணித்திட்டத்தில் ஈடுபடுவதால் மாணவர்கள் இளம் வயதிலேயே நாட்டு முன்னேற்றத்தில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைப்பதையும் அவர்களுக்கு விட்டுக்கொடுத்தல், தன்னம்பிக்கை, தலைமைப்பண்பு ஆகியவை வளரும் என்றார். மாணவர்கள் தாங்கள் கற்கும் தொழில் நுட்பம் மூலம் சமுதாயப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்றும் இயற்கையும், தொழில்நுட்பமும் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்பட வேண்டும் என்றார். இந்நிகழ்ச்சியை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்க்கு முதன்மையர் மற்றும் சிறப்பு விருந்தினர்

பரிசளித்தனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் எழுச்சி உரை, கவிதை, குறு நாடகம் ஆகியவற்றில் காந்திய கொள்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

நிகழ்ச்சியில் 400 மாணவர்கள் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. குமுதா, திட்ட அலுவலர்கள் லதா, சுகன்யா, கவிதா, வினோத், செந்தில்நாதன், தங்க ஹேமாவதி மற்றும் மாணவர் மன்ற ஆலோசகர் முனைவர் ஜி.ஜே. ஜானவி ஆகியோர் பங்கேற்றனர்.

முன்னதாக முனைவர் க. குமுதா, நாட்டுநலப் பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் வரவேற்றார். செல்வி. இந்து, மாணவர் மன்ற இணை செயலாளர் நன்றியுரை ஆற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்